SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

Face book:- Social Organizations Networking for Development - (SOND)

# மாதாந்த அறிக்கை தை , 2015

## Social Organizations Networking for Development

**RKM Road**
**Akkaraipattu**

## இதழின் உள்ளே

1. யாழ்
2. மட்டக்களப்பு
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

**No. 19, Saravana Road**
**Kallady Batticaloa.**

**60" Arasady Road**
**Jaffna.**

**"We all will Create a Better World"**

SOND

யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம் கீழ்வ

# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம் கீழ்வருமாறு

## இயற்கை விவசாய பண்ணை

31.01.2015 பல்லப்பை இயற்கை விவசாய பண்ணையில் சேதன விவசாய களப்பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியினை சேதன விவசாய முன்னோடியான இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த Dr Richard நடாத்தினார். இப்பயிற்சியில் விவசாய அமைப்பின் பிரதிநிதிகளும் ஏனைய விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

பண்ணையில் ஏற்கனவே பயிரிடப்பட்ட பயிர்கள் பராமிக்கப்படுவதோடு இம்மாதத்தில் சோளம்,வெங்காயம் என்பன புதிதாக பயிரிடப்பட்டுள்ளன.








**"We all will Create a Better World"**

# கூட்டுறவுத்துறையின் ஆய்வு தொடர்பான செயற்பாடு.

கூட்டுறவுத்துறையின் ஆய்வானது 2014ம் ஆண்டு இறுதிப்பகுதியில் பலநோக்கு கூட்டுறவுச்சங்க எல்லைப் பரப்பில் நடைபெற்றது. இதில் 13 MPCS களில் SOND நிறுவனமானது ஆய்வு நடாத்தியது. ஆய்விற்கான ஆவணங்கள் கூட்டுறவுத் துறை அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் இம்மாதத்திற்கான செயற்பாடுகளாக கூட்டுறவுத் துறையை விருத்தி செய்வதற்காக எவற்றை செயற்படுத்தலாம், எவ்வாறு செயற்படுத்தலாம் என்பன பற்றியும் ஆய்வின் போது பெறப்பட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள், எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்பவற்றை கலந்துரையாடி அதற்கான உபாயங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.



## MRE செயற்திட்டம்

இம்மாதம் MRE செயற்பாட்டில் MRE பணியாளர்களினால் செயற்பாட்டுப் பிரதேசங்களில் 3 வகையிலான 61 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 02 வெடிக்காத வெடி நிலையில் உள்ள வெடி பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டது. மேலும் 15 தடவைகள் 78 வீட்டுத் தரிசிப்பினை மேற்கொண்டு 209 பேருக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டது. அத்துடன் 10 தடவைகள் மிதிவெடி அபாயப் பகுதிக்கு சென்று பார்வையிட்டமைக்கமைவாக அங்குள்ள பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் 119 நபர்களினை தொடர்பு கொண்டு MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. மற்றும் 36 தடவைகள் சமூக மட்டத்தில் மக்களை சந்தித்திருந்ததனூடாக 431 பேருக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டதுடன் மொத்தமாக 759 பேருக்கு இம்முறை எமது MRE பணியாளர்களினால் MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.





மேலும் எழுதுமட்டுவாள் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பம் ஒன்றினை இனங்கண்டு கொண்டதுடன் இவர்களில் மிகவும் பின் தங்கிய நிலையில் 5 பிள்ளைகள் கல்வி கற்பதற்கான வசதிகள் குறைந்துள்ள நிலைமையில் வாழ்ந்து வருவதனால் இவர்களின் கல்வியினை தொடர்வதற்காக கல்விச் செலவினை ஈடு செய்யும் பொருட்டு எமது பணியாளர்கள் UNICEF உடன் தொடர்பு கொண்டு கல்வி உதவிப்பணமாக மாதாந்தம் ரூபா 3000 வழங்குவதற்கான ஏற்பாட்டினை செய்துள்ளனர்.

SOND

## தகவல் வளநிலையம்

இம்மாதம் எமது **SOND** அலுவலகத்திலுள்ள வளநிலையத்தில் நடமாடும் நூலகசேவைக்கேற்ப யா/உயரப்புலம் பாடசாலை, யா/இளையதம்பிபாடசாலை யா/செங்குந்தா இந்துகல்லூரி, யா/நல்லூர் இந்துதமிழ் மகளிர் கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகளில் 06 தலைப்புக்களில் 27 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.




மேலும் நடமாடும் நூலகம் செய்யப்படும் பாடசாலைகளான யா/நல்லூர் இந்துதமிழ் மகளிர் கல்லூரி, யா/செங்குந்தா இந்துக்கல்லூரி, யா/இளையதம்பி பாடசாலை போன்றவற்றிற்கு**TINY LIFCODictionary** மற்றும் திருக்குறள் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

1. எதிர் காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல். **(Create a Conducive Society for Good Environment for the Future).**

மேற்படி திட்டத்தினை மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்துவதற்கு டயக்கோனியா நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு, ஆரையம்பதி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் நெடுஞ்சாலை மரநடுகைத் திட்டமாகவும், பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் அனர்த்த அபாயக் குறைப்பு மற்றும் காலநிலை மாற்றம், இயற்கை வழி விவசாயம் மற்றும் விவசாய அமைப்புக்களைப் பலப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளில் காலநிலை மாற்ற செயற்பாட்டுக் குழுவினது 7வது அமர்வானது துறைசார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் 25 பேரை உள்ளடக்கியதாக நடைபெற்றது. இதன் போது பாசிக்குடா கடலில் சுற்றுலா விடுதி உரிமையாளர்களால் சேதமாக்கப்பட்டு வரும் முருகைக் கற்கள் மற்றும் கடற் கரையில் பொதுமக்கள் நடமாடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் இக்குழுவிலிருந்து சிலர் நேரடியாகச் சென்று நிலமைகளை அவதானித்து அறிக்கை சமர்ப்பித்தல் என்றும் வேறு பல சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்ற விடயங்கள் தொடர்பான விடயங்கள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டது.





## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 45 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.

காந்தி கழக சிறுவா்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவா்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 3கலந்துரையாடலும்,3 திரைப்படக்காட்சியும் நடை பெற்றுள்ளது இதில் 18 ஆண், 24 பெண்கள் உட்பட 42 சிறுவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

1. கழகத்தில் செயற்படும் சிறுவர்களால் நடமாடும் நூலகசேவை நடாத்தப்பட்டுள்ளது இதில் 48 புத்தகம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
2. புதிதாக 2 அங்கத்தவர்கள் இணைந்துள்ளார்கள்.
3. 5 கழக உறுப்பினர்கள் அலுவலகத்தில் காணப்படும் பாவனைக்குதவாத பேப்பர்களினால் 150 குழுசைப் பைகள் தயாரித்துள்ளார்கள்.

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

01. காந்தி கழக 45 உறுப்பினர்களுக்கு எமது அமைப்பினால் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

02. 6 தடவை கிறிக்கட் வெட் சிறுவர்கள் விளையாடுவதற்காக வழங்கப்பட்டுள்ளது.





## 03. தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 9 தலைப்பில் 92 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

### பணியாளர் கலந்துரையாடல்

2015 ம் வருடத்திற்கான அலுவலக செயற்பாட்டுத் திட்டமிடல் கலந்துரையாடலானது 2015.01.30 ம் திகதி அக்கரைப்பற்று SOND அலுவலகத்தில் நிறைவேற்றுப்பணிப்பாளர் செந்துராசா அவர்களால் நடாத்தப்பட்டது. இதில் அக்கரைப்பற்று, மட்டக்களப்பு அலுவலகப் பணியாளர்கள் 6 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.

SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

**“We all will Create a Better World”**